வால்டேரும் அண்ணாவும்

சை.வே.சிட்டிபாபு

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

UG5728
R007G02
UG5728

வால்டேரும் அண்ணாவும்

சை.வே.சிட்டிபாபு

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பதிப்புரிமை
பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

Copy right :
Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021.

பதிப்பு எண் : 168

விலை : ரூ. 15/-

பதிப்பு விவரங்கள் :

1. ஆசிரியர்	:	பேராசிரியர். **சை.வே.சிட்டிபாபு** முன்னாள் துணைவேந்தர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அண்ணாமலை பல்கலைக்கழகம்
2. தலைப்பு	:	வால்டேரும் அண்ணாவும்
3. பதிப்பித்தோர்	:	பதிப்புத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021.
4. ஆண்டு	:	2000
5. பக்கங்கள்	:	48
6. பொருள்	:	சமூக சிந்தனை
7. பொது பதிப்பாசிரியர்	:	முனைவர். **இரா.காசிராசன்** பதிப்புத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021.
8. அச்சிட்டோர்	:	ம.கா.ப.கூட்டுறவு அச்சகம் பல்கலை நகர், மதுரை - 625 021.

Prof. M. SALIHU
Vice-Chancellor
Madurai Kamaraj University

Indeed, I deem it a privilege and a great honour to write this felicitous remarks about Dr.S.V. Chittibabu, the third Vice-chancellor of Madurai Kamaraj University, at the time of the publication of a book authored by him. Professor S.V. Chittibabu, the octogenarian academic leader delivered two important and significant lectures on Anna and Voltaire on March 7, 2000 at Madurai Kamaraj University under the aegis of the Annapoorani - Ramaiah Endowment created in Madurai Kamaraj University by Professor R. Jegadeesan, Principal, Victory Tutorial College, Madurai and former Member of the Syndicate of Madurai Kamaraj University.

Only very few persons had the unique opportunity of serving as Vice-chancellors in two Universities. Professor S.V. Chittibabu is one of such a few persons who served as the Vice chancellor in Madurai Kamaraj University as well as in Annamalai University totally for a period of nine years (one term in Madurai Kamaraj University and two terms in Annamalai University). I presided over the forenoon lecture

delivered by the eminent personality and listened to the inspiring and thought-provoking lecture for nearly two hours. The learned speaker spoke on Anna in English as per the wish of the creator of the endowment. The speech delivered by him on that day was marvellous. It was similar to the speeches of the earlier great orators of Tamil Nadu who served as Cabinet Ministers, Academicians, Judges and Vice-Chancellors of Universities.

Likewise, the afternoon lecture on Voltaire for a couple of hours was significant and memorable. The lecture on Voltaire was delivered in Tamil.

The knowledgeable speaker Professor S.V. Chittibabu described the greatness of Anna and paid a glowing tribute in a fitting and proper manner. According to him, "Anna was the true conscience of the age in which he lived. He belonged to the free masonary of the enlightened who thought in advance of his times".

The distinguished speaker highlighted the views of Voltaire on God. According to Voltaire, "God provides

reward for good actions of the people and inflicts punishments on people whose actions are bad".

I congratulate Dr.R. Kasirajan, Publication Officer of Madurai Kamaraj University, for bringing out this book within a week.

This book published by Madurai Kamaraj University would be of much use to the posterity for widening their knowledge and power to communicate. The book is a scholarly venture in comparative studies on great thinkers like Voltaire and Anna. Madurai Kamaraj University takes pleasure in publishing these two monumental lectures in the form of a book on the occasion of the celebration of the 81st birthday of Professor S.V. Chittibabu on December 19, 2000 at Chennai.

Madurai
12.12.2000

M. SALIHU

Dr.S.V. Chittibabu
Former Vice-Chairman, T.N. State
Council for Higher Education &
Former Vice-Chancellor, Madurai
Kamaraj & Annamalai Universities

FOREWORD

I deem it a privilege and a pleasure to have been given the opportunity to deliver in March last the two lectures published in this booklet - One on Anna and the other on Voltaire under the auspices of the Annapoorani - Ramaiah Endowment created by my long time and esteemed friend Prof.R. Jegadeesan in Madurai Kamaraj University in memory of his beloved parents. Incidentally, he has done the University proud service by his valuable contributions to the growth and development of the University ever since its genesis by being a member of its Senate and of its Syndicate as well. I should express my grateful thanks to Prof.M. Salihu, the Vice-chancellor and also to the Syndicate for having invited me to deliver the above Endowment Lectures, as expressly desired by Prof. R. Jegadeesan who had been for quite sometime urging me to speak specially on Anna in English and Voltaire in Tamil. I accepted the invitation with

great pleasure. Who would not like to reflect on two of the greats of history - Anna and Voltaire?

Anna, the unforgettable celebrity of Tamilnadu, nay, of India charmed the learned as well as the hoi polloi by his magnificent leadership, astounding erudition, path-breaking literary output, universality of outlook and love of humanity which will for ever remain a beacon of inspiration for us all.

Voltaire of France was a writer supreme in literary, craftsmanship with a versatile intellect, a brilliant expounder of truth, a mordant critic and an inimitable wielder of the sharp weapons of irony and sarcasm.

In the two lectures delivered on these two extraordinary personalities, pressed as I was by constraints of time, I had attempted to highlight their many, splendoured achievements and the profound impact that their prolific and thought-provoking speeches and writings had on the people of their time. History must accord these two magnetic personalities their due place in its glittering pages recognizing the fact the they were architects of their own fortunes and proved

themselves the man of the hour and signal benefactors of posterity.

I sincerely thank the Vice-chancellor and the Syndicate for undertaking the publication of this booklet containing my two lectures. My grateful thanks are due to Prof.R. Jegadeesan, Dr.G. Velan, Dr.R. Kasirajan and others who were not little responsible for bringing out this booklet within a short time.

Chennai
12.12.2000

S.V. CHITTIBABU

பேராசிரியர் இரா. செகதீசன்
முதல்வர்
விக்டரி தனிப் பயிற்சிக் கல்லூரி &
முன்னாள் ஆட்சிக் குழு உறுப்பினர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

அறிமுகம்

என்னைப் பெற்றுப் பேணி ஆளாக்கிய என் தாய்-தந்தையர் பெயரில் "அன்னபூரணி-இராமையா அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்" 28-08-1966-ல் இன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகம் என்றழைக்கப்படும், அன்றைய மதுரை பல்கலைக்கழகத்தில் என்னால் நிறுவப்பட்டது. தமிழ் நிலத்தின் ஒரு சிறந்த அறிஞரைப் (எழுத்தாளர்-சிந்தனையாளர்) பற்றி அயல்நாட்டினரும் அறிவதற்காக ஆங்கிலத்திலும், பிற நாட்டு அறிஞர் ஒருவரைப்பற்றி நம் தமிழ் மக்கள் அறியத் தமிழிலும் இரண்டு சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் அமைக்கப்படவேண்டும் என்பது முக்கிய விதி. முதல் துணைவேந்தர் டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ஆங்கிலக் கவிஞன் வில்லியம் வேர்ட்ஸ்வர்த் (WILLIAM WORDSWORTH) பற்றித் தமிழிலும், சேக்கிழார் பற்றி ஆங்கிலத்திலும் பேசி அறக்கட்டளைச் சொற்பொழிவுகளைத் தொடங்கிவைத்தார். பின்னர் என் வேண்டுகோளுக்கிணங்க அவரே இரண்டாவது முறையாக படித்த மேதை, மரபு, மற்றும்

கட்டுப்பாடுகளுக்கடங்கா கணிதத் தத்துவஞானி பெர்ட்ரண்டு ரசல் (BERTRAND RUSSELL) பற்றித் தமிழிலும், முறைசார்ந்த கல்வி (FORMAL EDUCATION) பயிலா சிந்தனையாளன் சாக்ரட்டீஸ் போன்று இருபதாம் நூற்றாண்டில் நம் சிந்தனையைத் தூண்டி இந்நாட்டின் அவலநிலை போக்க கட்டுக்கடங்காது, அயராது உழைத்த பெரியார் இராமசாமியைப் பற்றி ஆங்கிலத்திலும் பேசினார். இடையே இரண்டாவது துணைவேந்தர் டாக்டர் மு.வரதராசனார் உட்படப் பல கல்வியாளர் சொற்பெருக்காற்றினர்.

இருபதாண்டுகள் இடைவிடாது தொடர்புகொண்டு, இறுதியாக இசைந்து, இந்த ஆண்டில் முத்தான மூன்றாவது துணைவேந்தர் டாக்டர் சை.வே.சிட்டிபாபு அவர்கள் வளையாத உள்ளம் படைத்த அறிவுலக மேதை ஃபிரான்ஸ் நாட்டின் வால்டேர் (VOLTAIRE) பற்றித் தமிழிலும், தமிழ்த்திரு நாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட விடி வெள்ளி பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி ஆங்கிலத்திலும் ஒரே நாளில் அயர்வு, சோர்வு, வயது, இவைகளைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் இரண்டு சொற்பொழிவுகள் ஆற்றி நம்மை இன்பக்கடலில் ஆழ்த்தினார்கள்.

சிந்தனையாளன் வால்டேர் பன்முகம் படைத்தவன். கவிதைகள், உரைநடை, நாடகங்கள், துன்பியல்-இன்பியல் ஆகிய இரண்டு வகைப்பட்ட நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், வரலாற்று ஏடுகள், தத்துவார்த்தக் கட்டுரைகள், இன்னும் பல அவர் படைப்புகள். "பதினெட்டாம் நூற்றாண்டையே வால்டேர் என்று பெயரிட்டு அழைக்கலாம்", என்பான் விக்டர் உறியூகோ (VICTOR HUGO). அரசனின் அடக்குமுறை, மேட்டுக் குடிமக்களின் கொடுமை, சமயவாதிகளின் ஒழுக்கக்கேடுகள், வரிக்கொடுமைகளின் மொத்த உருவம் அன்றைய ஃபிரான்சு. புரையோடிக்கிடந்த அந்தச் சமுதாயத்தில் அடித்தள மக்கள் ஆமையாக, ஊமையாகக்கிடந்தனர். "இந்த இழிநிலை போக்க சிரித்துச் சிந்திக்கச் செய்யும் சிங்க உள்ளம் படைத்த ஒருவன் வரவேண்டும்", என்றான் ஜெர்மன் தத்துவஞானி நீட்ஷே (NIETZSCHE). ஆம், வால்டேர் தோன்றினான். அடிமட்டமக்களின் அச்சம் அகற்றி, அதோடு சிரிக்கவைத்து, சிந்தனை விருந்தளித்து, பழைமையை முழுமையாக அழித்தான். OEDIPE என்ற நூலில் தொடங்கி தனது 83-வது வயதில் IRENE என்ற நூலை எழுதிமுடித்தான். எண்ணற்ற நூல்கள். அதில் உலகப்புகழ்பெற்றது CANDIDE. "நூல்கள் உலகை ஆள்கிறது. கல்வியைப் போல் வாக்குரிமையின் உணர்வை, வலிமையை அளிக்கவல்லது எதுவுமே இல்லை; ஒரு நாடு சிந்திக்கத் தொடங்குமேயானால் எதுவும் அதைத்தடுத்து நிறுத்தமுடியாது" என்பது அவனது அசைக்க

முடியாத நம்பிக்கை. இரத்தினச் சுருக்கமாகச் சொன்னால், அறிவுக்குத்தீனியளித்து, சிந்தனையைச் சிறகடித்துப் பறக்கச் செய்து, கோழையாக இருந்த ஏழையைக் குமுறும் எரிமலையாக மாற்றி விடுதலைக்கு-புரட்சிக்கு

உந்தித்தள்ளியவன். "என் தொழில் எனது மனதில் பட்டதைச் சொல்வதே", என்றான்.

"இத்தாலிக்கு ஒரு மறுமலர்ச்சி (RENAISSANCE), ஜெர்மனிக்கு ஒரு சமயப்புரட்சி (REFORMATION), ஃபிரான்சுக்கு ஒரு வால்டேர். மறுமலர்ச்சியையும், சமய புரட்சியையும் தனக்குள் ஒருங்கிணைத்தவன்; பாதிப்புரட்சி", என்பான் வில் டூரண்ட் (WILL DURANT). அதேபோல் தாழ்ந்து கிடந்த தமிழகத்திற்குப் பேரறிஞர் அண்ணா இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். சனாதனிகளைச் சந்திக்கு இழுத்து, பழைமையைச்சாடி, புதியதோர் உலகு காண வழி காட்டியவர். பட்டிதொட்டிகள், கல்லூரிக்கட்டிடங்கள், பல பல்கலைக்கழக வளாகங்கள், வானொலி, பொதுமேடைகளில் பேசியும் மற்றும் எழுதியும் அறிவுத்தாகத்தை ஏற்படுத்திய ஆசான். அவரது பேச்சில் இளைஞர்கள் மது உண்ட வண்டுகளானார்கள். அவர் எழுதிய வரலாற்றுக் கட்டுரைகள், பெருமனிதர்களின் வாழ்க்கைக்குறிப்புகள், கதைகள், புதினங்கள், தத்துவச் சிந்தனைகள், நாடகங்கள், மடல்கள், இன்னும் பல எண்ணிலடங்கா. அவர் எழுதி நடித்த "சந்திரோதயம்" நாடகத்துறை மறுமலர்ச்சியின் வித்து. அதைத் தொடர்ந்து வேலைக்காரி, ஓரிரவு, நீதிதேவன்

மயக்கம், சிவாஜி கண்ட இந்துராஜ்யம் அறியாமைக்கு, மடமைக்கு, கொடுமைக்கு அடித்த சாவு மணி. "குமாஸ்தாவின் பெண் அல்லது கொலைகாரியின் குறிப்புகள்" என்ற புதினத்தில் தொடங்கி "வெள்ளைமாளிகையின் கறுப்பு மனிதன்" என்ற நூல் ஈராக, இடையே ரங்கோன் ராதா, பார்வதி பி.ஏ., உட்பட அவர் எழுதியவைகள் என்றும் அவர் புகழ் பாடும். அவருடைய எழுத்துகளில், பேச்சுகளில் வால்டேரின் குத்தல்கள், நையாண்டிகள், நகைச்சுவைகள் இழையோடுவதைக் காணலாம்.

இந்த இரண்டு அறிவுலக மேதைகளைப்பற்றி பேசுபவர் தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் புலமை உள்ளவராக, வரலாற்றுப் பின்னணி, இலக்கியச்சுவை, தத்துவச் சிந்தனையுள்ளவராக இருக்க வேண்டும். இருவரும் எழுதிய புத்தகப்பட்டியல் நீண்டது. அவைகள் அனைத்தையும் படித்து, அதன் சாரத்தை நமக்கு மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் கொடுக்க வேண்டும். அதோடு வால்டேர், அண்ணாபோல் கிண்டல், கேலியுடன் சிரிக்கவைத்து சிந்தனையைத்தூண்டும் ஆற்றல் படைத்தவராகயிருக்கவேண்டும். இன்றுள்ள நிலையில் இவைகளையெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற மேதை பேராசிரியர் சிட்டிபாபு ஒருவர்தான். தனக்கே உரித்தான நளினமான நகைச்சுவையுடன் இருவரைப்பற்றியும் நான்கு மணி நேரம் எந்தவித களைப்பு, அயர்வு இல்லாமல், கேட்பவருக்கும் சலிப்பு ஏற்படாமல் அவருடைய

சொற்பொழிவில் தேனுண்டு மயங்கிக்கிடக்கும் வண்டுகளாக நம்மை மாற்றினார். அவர் இந்த வயதில் எடுத்துக் கொண்ட சிரமம் எல்லையற்றது. பலதலைப்புகளில், வரிசைப்படுத்தி, கோர்வையாகப் பேசியது பாராட்டத்தக்கது. இருமேதைகளும் வற்றாதக் கனிச்சுரங்கங்கள். மூன்றாவது மேதை நம் மூன்றாவது முத்தான துணைவேந்தர் அவைகளைத் தோண்டிவெட்டி எடுத்து, வேண்டுவனதந்து மேலும் படிக்கத் தூண்டியுள்ளார். இதுவரை பேரறிஞர் அண்ணாவைப்பற்றி ஆங்கிலத்தில் இவ்வளவு நுணுக்கமாகத் திறனாய்வு எவரும் செய்ததில்லை. பேராசிரியர் சிட்டிபாபு பேரறிஞர். அவர் சொற்பொழிவுகளைப்பற்றி மதிப்பீடு செய்ய நான் அருகதை அற்றவன். மற்றுமொரு ஆசை. இதேபோல் இன்னொரு நாள் பிரெஞ்சுப்புரட்சிக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடிய மற்றொரு அறிஞன் ரூசோ (ROUSSEAU) , அண்ணா ஆகிய இருவரைப்பற்றிப் பேசத் தாழ்மையாக வேண்டுகிறேன். இரண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தி என் பெற்றோர்களைச் சிறப்பித்த பேராசிரியர் பெருந்தகைக்கு என் இதயங்கனிந்த நன்றி.

நமது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் இன்றையத் துணைவேந்தர் பேராசிரியர் எம். சாலிகு அவர்கள் எளிமை, நேர்மை, தூய்மை, அடக்கம் இவைகளின் உள்ளடக்கம். பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவுகளை நடத்த அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து தானே தலைமை ஏற்று, சிறப்பாக நடத்திக் கொடுத்தார். மேலும் இரு சொற்பொழிவுகளையும் பல்கலைக்கழக பதிப்புத்துறையே பொறுப்பேற்று நூல் வடிவில் கொண்டு வர எல்லா

உதவிகளையும் செய்தார். அதோடு இந்நூலை பேராசிரியர் சை.வே.சிட்டிபாபு அவர்களின் 81-வது பிறந்தநாளில் சென்னையில் அவரே வெளியிட இசைவும் தந்தார். இவைகள் அனைத்தும் என் இதயத்தில் என்றும் மண்டிக் கிடக்கும். அவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

இறுதியாக, பதிப்புத்துறை அதிகாரி டாக்டர் ஆர். காசிராஜன் பதிப்பிக்கப் பொறுப்பேற்று, நகல்களைத் திருத்தி அச்சுப்பிழையில்லாமல் வெளிவர எடுத்துக்கொண்ட முயற்சி என் நினைவில் என்றும் பசுமையாகயிருக்கும். பின்னணியில் எனக்குப் பின்னால் இருந்து அமைதியாக அரும்பணியாற்றிய என் அருமை நண்பர் பேராசிரியர் டாக்டர் ஜி. வேலன் அவர்களுக்கு எப்படி நான் நன்றி சொல்வது? அவர்தான் நான், நர்ன் தான் அவர். என்றும் அவருக்கு என் அன்பு நன்றி.

மதுரை இரா. செகதீசன்
12.12.2000 அறக்கட்டளை நிறுவனர்

வால்டேர்

''இந்த வகையான நாவலைத்தான் உண்மையாக படித்து மகிழ முடியும்'' என்ற பிரஷ்யாவின் மாமன்னன் ∴பிரடெரிக் 1759ஆம் ஆண்டு அது பிரசுரிக்கப்பட்ட வருடத்திலே கூறினான். அன்றைய தினத்தில் இருந்து இன்றுவரை இந்த உலகமானது பல புதினங்களைப் படித்து இருக்கிறது. பல பெரிய மனிதர்களை சந்தித்து இருக்கின்றது. ஆனால் வால்டேரின் கேன்டீத் ஒரு தலைசிறந்த புதினமாக, ∴பிரென்ச் இலக்கியத்தில் மற்ற நூல்களைவிட மிக அதிக அளவில் படிப்போரைக் கவர்ந்து புகழ் பெற்ற ஒரு நூலாக இன்றும் விளங்குகிறது. அது ஒரு அற்புதமான அரிய கருத்துக் கருவூலமாக நம் காலத்தினை, நம்மைச் சார்ந்த நிகழ்வுகளை நமக்குக் காட்டக்கூடியதாக விளங்குகிறது. வால்டேர் இந்த உலக நிகழ்வுகளைப் பற்றி எழுதும் பொழுது அது மற்ற மனிதர்களுக்கு என்ன நடக்கிறது மற்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்த உலகின் தாக்கம் என்ன என்பது குறித்தும் அதாவது உங்களுக்கும், தனக்கும், நமது குடும்பத்திற்கும், அறிமுக- மில்லாதவர்களுக்கும், நண்பர்களுக்கும், எதிரிகளுக்கும் என்ன உணர்வுகள் இருக்குமோ அதையொட்டி எழுதியுள்ளார். கேன்டீத் உலகப் புகழ் பெற்ற புதினமாக விளங்கும் தருணத்தில் வால்டேர் இந்த ஒரே ஒரு புத்தகத்தின் மூலம் மட்டுமே புகழ் பெற்றவர் அல்லர். இலக்கிய உலகில் ஒரு ஜாம்பவனாக நூற்றுக் கணக்கான நூல்களை எழுதிய மிகச்சிறந்த எழுத்தாளர்களில் தலையாய சிந்தனைச் சிற்பியாக விளங்குகிறார். கதாபாத்திரங்களை உருவாக்குவதிலும், ஒரு கருத்தில் இருந்து பிறிதொரு கருத்திற்கு இலகுவாக மாறுவதிலும், ஒப்பிட இயலாத் திறனாய்வாளராக விளங்குவதிலும், உண்மையை எடுத்து இயம்புவதிலும், கேலியும், கோபமும் கலந்த கிண்டலை வார்த்தைச் சிலம்பாட்டமாகப் பயன்படுத்துதலிலும் அவருக்கு நிகர் அவரே.

17ஆம் நூற்றாண்டானது ∴பிரான்சை ஆண்ட 14வது லூயி அரசனின் காலமாக விளங்குவதாக சொல்லப்படுவதுபோல் 18ஆம் நூற்றாண்டானது வால்டேரின் காலமாகக் கருதப்படுகிறது. உண்மையில் வால்டேர் போன்று அவரின் பொற்காலத்தை கண்ணாடி போன்று காட்டக்கூடியவர் வேறு எவரும் இலர். இந்த நூற்றாண்டில் எல்லா மதங்களும், முடியாட்சி முறைகளும், பிரபுத்துவ முறைமையும் பெரும் மாறுதல்களைச் சந்தித்தன. வால்டேர் இது போன்ற மாற்றங்களை உருவாக்குவதிலும், புதிய

கோட்பாடுகளை அசுரத் தனமாக தன் அறிவாற்றலின் மூலம் பரப்பச்செய்வதிலும் தனிப்பட்ட சிறப்போடு விளங்குகிறார். தலைசிறந்த ஜெர்மானிய கவிஞர் கெத்தே என்பவர் வால்டேரை மிக உயர்வாக கருதினார். வால்டேரின் சிறப்பியல்புகளை வரிசைக்கிரமப்படுத்தும் பொழுது கீழ்கண்ட சிறப்பம்சங்களை தனக்கேயுரிய பாணியில் விவரிக்கிறார். ஆழமான, அறிவாற்றலுடன் கூடிய, உள்ளுணர்வுடன், தொடர்ச்சியான, திறனுள்ள, உயர்வான, கற்பனை வளம் செறிந்த உணர்தலுடன், உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளும் இயல்புடன், கருத்து உணர்வுடன், உரிமையுடன், வளத்துடன், பல திறப்பட்ட உணர்வுகளுடன், அதீத கருத்துச் செறிவுடன், கனிந்த கருத்துக்களுடன் அன்புணர்ச்சியுடன், சொற்பிரயோகத்துடன், கருத்துச் செம்மை, உயிரோட்டத்துடன், உறுதியுடன், அறிவாற்றலுடன், தைரியத்துடன், கிண்டலுடன், அற்புதமான கருத்துக்களுடன், எழுத்துப் பாணியுடன், செய்யுள் நடையுடன், இயைந்த கருத்துடன், சுத்தமான, சரியான அழகுடன் மற்றும் முழுமையுடன் விளங்குவனவே வால்டேரின் எழுத்துக்கள். நாம் வால்டேரைப் பற்றி அறியப் போதுமான கருத்தாக இதை நினைக்கலாம்.

ஆனால் கெத்தே மேற்சென்று வால்டேர், ஒருவர்தான் எல்லா காலத்திற்கும் தலைசிறந்த எழுத்தாளர் என்பதோடு மட்டுமின்றி இயற்கையின் ஒரு அற்புதமான படைப்பு அவர் என்பதாக புகழ்ந்துள்ளார்.

நாம் வால்டேரை அதீத படைப்பாளியாகக் கணக்கிடா விட்டாலும் அவர் ஃபிரான்சின் தலையாய எழுத்தாளர் என்பது உண்மையே. அவரின் நெடிய ஆயுட்காலத்தில் [1694-1778] அவரின் இலக்கிய படைப்புகள் செய்யுளிலும், உரைநடையிலும், புதினத்திலும், புதினமல்லாத எழுத்துக்களிலும், சிறு கவிதைகளிலும், சிந்து கவிதைகளிலும், காவியபாடல்களிலும், உரையாடல்களிலும், துன்பியல் நாடகங்களிலும், இன்பியல் நாடகங்களிலும், கதைகளிலும், தத்துவரீதியான எழுத்துக்களிலும், வரலாற்று ஏடுகளிலும், பலதரப்பட்ட சிறு புத்தகங்களிலும், கையேடுகளிலும், சிறு பத்திரிகைகளிலும், இலக்கிய சம்பந்தப்பட்ட கட்டுரைகளிலும், விஞ்ஞான, சமய, அரசியல் மற்றும் தனிப்பட்ட விருப்பத்திற்குரிய கட்டுரைகளிலும், இன்று நமக்கு கிடைத்துள்ள அவரது 20000 கடிதங்களிலும் தன் எழுத்தாற்றல் முத்திரையினைப் பதித்துள்ளார்.

வால்டேர் 1694லே ஆவண ஆயத்துறை பதிவாளர் அருவேயின் கடைசிப் புதல்வனாக ஃபிரான்சிலே பிறந்த பொழுது

குழந்தை உயிர் பிழைக்கும் என யாரும் கருதவில்லை. நோய்வாய்ப்பட்டு பரிதாபத்திற்குரிய குழந்தைக்கு ஃபிரான்ஸ்வா மரி அருவே என்ற பெயர் இடப்பட்டு அவசர அவசரமாக ஞானஸ்நானம் செய்யப்பட்டது. மருத்துவம் வளராத அந்தச் சூழலிலும் குழந்தையானது தப்பிப் பிழைத்தது. உடல் அளவில் என்றும் வலிமையுடன் காணப்படாவிட்டாலும் அது ஒரு அற்புதக் குழந்தையாக தனது மூன்றாவது வயதிலேயே **La Fontaines** எனும் எழுத்தாளனின் கட்டுக் கதைகளை ஒப்பிக்கும் திறன் பெற்றிருந்தது. ஐயுறவுக்குரிய மதிப்பை பெற்றிருந்த **Abbe de Chateaunouf** எனும் மடத்துறவி குழந்தைக்கு ஆசானாக இருந்து கல்வி கற்பித்தார். புறம்பான தம் கருத்துக்களை அதன் உள்ளத்தில் புகுத்தினார்.

வயதுக்கு வந்த பிறகு தன் பெயரினை வால்டேர் என மாற்றிக் கொண்டார். அந்தப் பெயரே இன்றும் வாழ்கிறது. நாமும் அந்தப் பெயரிலேயே அழைக்கின்றோம்.

வால்டேரின் பள்ளிப் பருவம் எந்தவொரு பெற்றோரும் விரும்பும் விதத்தில் இருந்தது. அப்படிப்பட்ட புத்திசாலிப் பையனாக வால்டேர் விளங்கினார். தன் மகன் சட்டத்துறையில் நுழைந்து பெருமை பெற வேண்டும் என்று நினைத்த தந்தையாரின் விருப்பத்திற்கெதிராக தான் எழுத்தாளனாக ஆக வேண்டும் என்று விழைந்தார்.

வால்டேர் அறிவாளிகளுடனும் புத்திசாலிகளுடனும் பழகுவதை மிகவும் விரும்பினார். ஆனால் 1716லே அவர் எழுதிய குத்தலான ஒரு விமர்சனப் பாடலுக்காக அவர் நாடு விட்டு நாடு கடத்தப்பட்டார். அவர் தம் காலமெல்லாம் நாடு கடத்தப்பட்டே வாழ்ந்தார். அவரின் கிண்டலான கேலியான விமர்சன எழுத்துக்களுக்காக அவருக்கு நாடு முழுக்க இரசிகர்கள் ஏற்பட்டாலும் எதிரிகளும் ஏராளம் இருந்தனர். அவரின் திறமை மற்றும் புகழ் வளர்ந்ததோடு மட்டுமின்றி எந்த ஒரு எழுத்தாளரும் இவர் பெற்ற புகழினைத் தான் வாழ்ந்த காலத்திலேயே பெற்றதில்லை. அவரின் எதிரிகள் இவர் வெகுகாலம் நாடு கடத்தப்பட்டு வாழ காரணமாயினர். ஆனால் இவருக்கு இவரின் விமர்சன எழுத்துக்கள் பெரும் ஆயுதமாக விளங்கின.

ஈடீப் (**Oedipe**) என்பது இவரின் அரங்கேற்றப்பட்ட முதல் நாடகமாகும். அது ஓர் மாபெரும் வெற்றி. 24வது வயதிலேயே ஃபிரான்சின் தலைசிறந்த நாடகாசிரியராக தான் வாழும் காலத்திலேயே பாராட்டப்பட்டார். ஈடீப் அவர் ஒரு சிறந்த

நாடகாசிரியர் என புகழ் பெற்றுத் தந்தது போல் அவரின் காவியம் ஆண்ட்ரியாத் (Henriade) அவரை ஒரு காவியக் கவிஞராக புகழை ஈட்டித் தந்தது. ஒரு கனவானுடன் நடந்த தகராறினால் அவர் இங்கிலாந்துக்கு இரண்டு ஆண்டு நாடு கடத்தப்பட்டார். இங்கிலாந்தில் இருந்தபோது பல பொருள்களைப் பற்றி எழுதி 1733லே பிரசுரித்தார். ஃபிரான்ஸின் அமைப்பு முறை பிரெஞ்சு புரட்சிக்கு முன்பிருந்த அரசியல் மற்றும் சமுதாயப் போக்குகள் ஆகியவற்றைக் கடுமையாக தாக்கி எழுதினார்.

இதே காலக்கட்டத்தில் அவர் ஒரு வரலாற்று ஆசிரியராகவும் பிரபலமானார். அவர் 14ஆம் லூயியின் காலம் மற்றும் உலக வரலாற்றுக் கட்டுரை போன்றவைகள் மனிதனின் நாகரிக வரலாற்றினை ஆய்ந்ததோடு மட்டுமின்றி நவீன வரலாற்றுப் படைப்பு முறைமைக்கு வழிவகுத்தன.

1730 வாக்கில் வால்டேருக்கு இரண்டு முக்கிய நண்பர்கள் கிடைத்தனர். முதல் நட்பு ஷாட்டலே அம்மையாருடன் தொடங்கியது. அவ்வம்மையார் உயர்குலத்தைச் சேர்ந்த அறிவுக்கூர்மையான வால்டேருக்குக் காமக்கிழத்தியாக இருந்து அவருக்கு பெருத்த ஊக்கத்தை அளித்தவர். அதன் பிறகு, 1736லே பிரஷ்யாவின் இளவரசன் ஃபிரடெரிக் [பிற்காலத்தில் ஃபிரடெரிக் II அல்லது மாமனிதர் ஃபிரடெரிக் என்று புகழ்பெற்றவர்] வால்டேரை வெகுவாகப் பாராட்டி நீண்டதொரு கடிதம் எழுதினான். இருவரிடையே பழக்கமும் நட்பும் நன்றாக வளர்ந்தது. ஃபிரடெரிக் ஃப்ரெஞ்சுக் கலாச்சாரத்தினை அறிய ஆர்வம் காட்டியதோடு மட்டுமின்றி ஃபிரான்சின் மிகப் பெரிய எழுத்தாளருடன் தோழமை கொண்டுள்ளதைப் பற்றி பெருமை கொண்டான்.

ஆனால் 1753ல் வால்டேருக்கும் ஃபிரடெரிக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவின் விளைவாக வால்டேர் விசாரணையின்றி ஃபிராங்பர்ட்டிலே சிறையில் வைக்கப்பட்டார். இதன் காரணமாகத் தன்னுடைய மூர்க்கத்தனமான கோபத்தினை வால்டேர் தம் ''மெம்வார்ஸ்'' என்ற நூலிலே தனிப்பட்ட கேலியுடனும், கிண்டலுடனும் ஃபிரடெரிக்கின் வாழ்க்கையைப் பற்றி தாக்கி எழுதியுள்ளார். பிறகு ஜெர்மனியிலிருந்தே தப்பித்து சுவிட்சர்லாந்தில் சுயேச்சையாக வாழ வகை செய்து கொண்டார்.

வால்டேர் சுவிட்சர்லாந்திலே இருந்த பொழுது தனது சுய சுதந்திர எண்ணத்தோடு மனிதன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

அரசின் கடுமையான ஆதிக்கத்திலிருந்தும் சர்வ

அதிகாரத்துடன் நடந்து கொண்ட மதக் குருக்களின் பிடியிலிருந்தும் மனிதன் சுய சார்புடையவனாக சுதந்திரத்துடன் விளங்க வேண்டும் என்பதை வால்டேரின் ''மெம்வார்ஸ்''. அதாவது தன் வரலாற்றுக் குறிப்புகளும் 1759ல் பிரசுரிக்கப்பட்ட அவரின் புதினம் ''கேன்டீத்''தும் வெளிப்படுத்தியது. 1740ன் தொடக்கக் காலத்திலிருந்து வால்டேர் கான்ட் அல்லது சிறுகதைகள் எழுதினார். அவைகளில் வரும் கதாநாயகன் ஒரு வழிப்போக்கன். உலகின் பல இடங்களுக்கு சென்று அவன் பெற்ற அனுபவங்களும் பட்ட இன்னல்களும் அக்கதைகளில் விவரிக்கப்பட்டன.

வால்டேரின் கான்ட் அல்லது சிறுகதைகளில் தத்துவ ரீதியான, அரசியல் ரீதியான மற்றும் சமய ரீதியான போதனைகள் நிரம்ப இருந்தன.

கேன்டீத் வால்டேரின் அற்புதமான படைப்புத் திறனுடன் விளங்குவதோடு மட்டுமின்றி சமூகத்தில் காணப்படும் தீய சக்திகளை இனம் காட்டும் பிரகாசமான புதினமாகும். மேலும் அவரது சிறுகதைகளில் வரும் கதாநாயகர்கள், பயணம் செய்யும் போது அவர்கள் கண்டது, கேட்டது, அனுபவித்தது அனைத்தும் வால்டேரின் உள் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன என்றே சொல்லலாம். கேன்டீத் நூலினை அவர் தாம் 60 வயது தாண்டிய பிறகே எழுதியதினால் தம் வாழ்நாட்களில் தமக்கு ஏற்பட்ட பற்றுகள் கவலைகள், உலகில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் அனைத்தும் அதில் இடம் பெற்றுள்ளன.

ஜெனிவா நகருக்கு அருகே தாம் தங்கிய காலத்திலிருந்தும் அதாவது 1758-59லிருந்து வால்டேர் தாம் எழுதிய கிண்டல் தொனிக்கும் எழத்துக்களுக்கு செயல்வடிவம் கொடுத்தார். விவசாயிகள் மற்றும். கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில் ஈடுபட்டார். கத்தோலிக்கரின் கொடுமைகளுக்குப் பலியான கலா (Cala) வின் குடும்பத்திற்காக அவர் பரிந்து எடுத்துக் கொண்ட பெரும் முயற்சி பிரசித்தி பெற்றதாகும். தானே எழுதிய போர்டபிள் என்ஸைக்ளோபீடியா (Portable Encyclopaedia) மற்றும் 'தத்துவார்த்த அகராதி' போன்றவைகள் அவரின் திறமையைப் பறைசாற்றின. பிறகு 1770க்குப் பிறகு தீவிரவாத தத்துவஞானிகள் வால்டேர் மதத்திற்கு எதிரி என்று குற்றஞ்சாட்டினார். அதற்கு எதிர்ப்பாக நாத்திகத்தை கடுமையாக கண்டிக்கும் ஒரு இயக்கத்தையே முடுக்கிவிட்டார். 1778ல் ஃபெர்னியிலிருந்து பாரீஸுக்குத் திரும்பினார். மக்கள் அவருக்கு ஆரவாரமான வரவேற்பு கொடுத்தனர். எழுச்சிமிகு

கூட்டங்களும், உற்சாகமூட்டும் கொண்டாட்டங்களும் அவரை திணற வைத்துவிட்டன. அதனால் சோர்வுற்று உடல்நலம் குன்றினார். ∴பாரிஸ் திரும்பிய நான்கு மாதங்களில் இயற்கை எய்தினார்.

இன்றைய பின்னணியில் வால்டேரின் முக்கியத்துவம்

மெக்காலே தன்னுடைய கட்டுரையான 'மாமனிதர் ∴பிரடெரிக்' என்பதிலே வால்டேரை கடுமையாக விமர்சித்துள்ளார். தனிப்பட்ட நிறுவனங்களையும், போலித்தனம் மற்றும் மதவெறித் தன்மையையும் அவர் வன்மையாக தாக்கியது மெக்காலேவிற்கு பிடிக்கவில்லை. எனவே அவரை ஒரு எதிர் மாறான இயல்பினைக் கொண்டவர் (a negative spirit) உருப்படியாக ஒன்றும் சாதிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார். ''வால்டேர் தன் பெயரைச் சொல்லக் கூடிய விதத்தில் எதொன்றினையும் உருவாக்கவில்லை. இருப்பதை அழிக்க வல்லவர். நல்லதொரு அறிவுக்கருவூலத்திற்கு அவர் எந்தவொரு நூலையும் அளிக்கவில்லை'' என்று சாடினார் **"Voltaire could not build; he could only pull down; he was the very Vitruvius of ruin. He has bequeather to us not a single addition to the stock of our positive knowledge".**

ஆனால் வால்டேர் 18ஆம் நூற்றாண்டில் தான் கண்ட மோசடிகளை மற்றும் இதர பயங்கரமான தீமைகளைத் தோலுரித்துக் காட்ட, வெளிப்படுத்த, தாக்க, கிழித்தெறிய, அழிக்க தன் எழுத்துக்களைப் பயன்படுத்தினார். இந்த வகையில் அவர் **"a positive spirit of rare energy and intelligence"** அதாவது அரிதான சக்தியும், மதிநுட்பமும் கொண்ட ஒரு ஆக்கபூர்வமான சக்தி என்றே அவரை பாராட்ட வேண்டும்.

அமைதியின் காப்பாளனாக, பொறுமையின் திலகமாக, நீதியின் குரலாக, சுதந்திரத்தின் எழுச்சியாக வால்டேர் காணப்படும் அதே வேளையில் அவர் போரின் கதாநாயகர்கள், அவற்றின் புகழ், அரசர்களின் தெய்வ உரிமைக் கோட்பாடு மற்றும் மதங்களின் பெயரால் நடந்த அக்கிரமங்கள் போன்றவைகளை எதிர்த்து எழுதினார். போர்களினால் புகழும் பேராண்மையும் ஏற்படுகிறது என்னும் வாதத்தை எதிர்த்தார். அரசர்களும் மத குருமார்களும், கோரும் உரிமைகள் போலித்தனமானவை என்று தாக்கினார்.

அவரின் தெளிவான, நகைச்சுவை நிரம்பிய, உணர்வு ததும்பும் எழுத்துக்கள் நம்மை கவருகின்றன. அவரின் உயர்வான

கருத்துக்களை நல்ல அறிவாற்றலை எண்ண ஓட்டங்களை நாம் அவரை மதிப்புடன் நல்லதொரு சக்தியாக பார்க்கத் தூண்டுகிறது.

வால்டேரின் உரைநடை அமைப்பு அவரின் எண்ண ஓட்டத்திற்கேற்ப அமைந்தது. குழப்பம், தெளிவின்மை, பொய்மை, பகட்டான எழுத்து நடை போன்றவைகள் அவரின் எழுத்துகளில் காண இயலாது. அவரது சிறு சிறு வாக்கியங்கள், தெளிவின் முத்திரையாகும். சிக்கலில்லா, குழப்பமில்லா, நேரிடையான எழுத்துக்கள் அவரை நம்மிடையே இன்றும் வாழவைக்கின்றன.

வார்த்தைகளால் உணர வைக்க இயலாத, உணர்வுகளுக்கு புலனாகாத பிரச்சனைகளை அழகாக விளக்கினார் வால்டேர். மனித சமுதாயமே அவரின் தலையாய சிந்தனையாய் விளங்கியது. பகுத்தறிவு அடிப்படையில் விவாதிப்பது மனித சமூகத்தின் முக்கிய உரிமையாகும் என அவர் கருதினார். வால்டேரின் உரைநடை பதினெட்டாம் நூற்றாண்டின் தத்துவார்த்தக் கொள்கைகளை கேள்வி கேட்பதின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். மூடப்பழக்க வழக்கங்கள், கொள்கை வெறி, குறிப்பிட்ட ஒரு தலைப்பட்ச கருத்து போன்றவைகளை அவரின் படைப்புகள் அம்பலப்படுத்தின. அந்நூற்றாண்டு அறிவுத் தெளிவிற்கு புகழ் பெற்றது என்பதை வால்டேரின் நூல்கள் உறுதிப்படுத்தின என்று சொல்லாம்.

வால்டேரின் அனைத்து நூல்கள்

வால்டேரின் நூல்கள் பலதரப்பட்டவையாக அதிக அளவில் உள்ளன. டாக்டர் தியோடர் பெஸ்டர்மேன் என்பவர் ஒரு புத்தகத்திற்கு 300 பக்கங்கள் என்ற வீதத்தில் வெளியிட்டாலும் 136 புத்தகங்கள் என்ற அளவில் வால்டேரின் படைப்புகள் அமையும் என்று சுட்டிக்காட்டுகிறார். இந்த கட்டத்தில் வால்டேரின் வாழ்க்கை வரலாற்றினை எழுதியவர்களில் ஒருவரான கிருஸ்தோபர் தாக்கர் என்பவரின் யோசனைப்படி வால்டேர் படைத்த இலக்கியத்தின் பெரும் பகுதியை ஒதுக்கி வைத்துவிட்டு அவரை அறிய முயற்சிப்பது வசதியாக இருக்கும். இந்த வகையில் மதிப்பீடு செய்தாலும் அவரின் அதீதத் திறமைகள் கவிஞராக அவரின் திரண்ட செல்வம் போன்றவைகள் அவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கத்தான் பயன்பட்டன. நேர்மையற்ற முறையில் வஞ்சிக்கப்பட்ட பல மக்களுக்கு அவர் ஆபத்பாந்தவராக விளங்கினார். நாடக ஆசிரியராகவும் மற்றும் கவிஞராகவும் அவர் கார்னீலுடனும் ரேசீனுடனும் ஒப்பிடப்படக் கூடியவர்.

ஆனாலும் 1759லே வெளியிடப்பட்ட அவரது கேன்டீத் தான்

அவருக்கு மங்கா புகழை ஈட்டித் தந்தது. அதில் கையாண்ட நையாண்டித்தனம் இன்றும் மறக்க முடியாததாகும்.

பாரீசுக்கு அவர் 1778லே தம்முடைய கடைசி நாடகத்தினைப் பார்க்கத் திரும்பினார். அவ்வமயம் தலைநகரிலே நீண்ட நாள்கள் சந்திக்க முடியாதிருந்த தன் நெருங்கிய நண்பர்களிடமும் தெரிந்தவர்களிடமும் இடைவிடாது கைகுலுக்கிய அந்த நிகழ்ச்சி இரண்டு நாட்கள் தொடர்ந்ததினால் அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மே 30ஆம் தேதி மரணமடைந்தார்.

ஃபிரெஞ்சுப் புரட்சியின் போது மக்களின் வீரநாயகனாக விளங்கிய வால்டேரின் உடலை வெளியே எடுத்து பாரீஸ் நகருக்குக் கொண்டு வந்த பிறகு மரியாதையுடன் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

வால்டேர் ஒரு காவிய நாயகன்

அவர் தாம் துன்பியல் நாடகங்கள் எழுதும் தருணத்தில் தம் தோட்டத்தை செம்மைப் படுத்துவதில் கவனம் செலுத்தினார். கடிகாரம் மற்றும் பட்டு காலுரைகள் செய்வதிலும் ஈடுபட்டுக் கொண்டே அற்புதப் படைப்பான கென்டீத் போன்றவைகளை எழுதினார்.

அசாதாரண மனிதரான வால்டேர் ஒரு கடவுளுக்கு ஒப்பிட்டு மதிக்கக்கூடிய அளவிற்கு உயர்ந்தார். அவர் பாரிசுக்குக் கடைசியாக பயணித்த பொழுது மக்கள் வெள்ளம் அவரைச் சூழ மக்களின் ஆவேசக் குரலொலிகள் ''வால்டேருக்கு வெற்றி! வால்டேர் நெடுங்காலம் வாழ்க! கலாவினைக் காப்பாற்றியவரின் புகழ் ஓங்குக!'' என்று வாழ்த்தின.

1778 மே மாதம் 30ந் தேதி இறந்தார். அவர் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார். வெற்றியோடு மறைந்தார்.

வால்டேரின் தத்துவம்

பிரபுத்துவக் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் வெறுப்பினையும், அவமான வார்த்தைகளையும் வால்டேர் எதிர்கொண்டார். அவர் எல்லாவிதமான பற்றுகளுக்கும், வெறித்தனங்களுக்கும், தான் என்ற ஆணவத்திற்கும் எதிரியாக உறுதியுடன் இருந்தார். ஒரு தலை சிறந்த வியாபாரியாகவும் நடுத்தர வகுப்பு குடிமகனாகவும் இருந்ததினால் ஒரு கடைக்காரர்கள் நாடு (a nation of shopkeepers) என்று அழைக்கப்பட்ட இங்கிலாந்தின் அரசியலமைப்பை வியந்து

நோக்கினார். செல்வத்தை பெருவாரியாக சேர்த்து வைத்திருந்த அவர் ஒரு நாளும் புரட்சியாளராக ஆகவில்லை.

அவரின் அறிவாற்றல், மதியூகம், திறமை போன்றவற்றால் பெரும் செல்வத்தினைத் திரட்டியவர். அவர் அனைத்துவிதமான அறிவு பூர்வத் துறைகளில், அதாவது, மதம் முதற்கொண்டு அரசியல் வரை, வான சாஸ்திரம் முதற்கொண்டு வரலாறு வரை, தன் கவனத்தினைச் செலுத்தி, மிகவும் சிக்கல் வாய்ந்த கேள்விகளுக்கு எளிதில் புரிந்து கொள்ளும் விடையிறுத்தார். அவரின் காலத்தைச் சார்ந்தவர்கள் மீதும் அவரின் காலத்திற்கு பின் வந்தவர்களின் மீதும் அவரின் தாக்கம் வெகுவாக இருந்தது.

வால்டேர் கடவுள் இருக்கிறார் என்பதனை மிகவும் நம்பியவர். கடவுள் ஒரு தெய்வீக பொறியாளரைப் போன்று திட்டமிட்டு கட்டமைப்பு செய்து இந்த அகண்ட பிரபஞ்சத்தை இயக்கியதாக நம்பினார். மேலும் தன் கூற்றுக்கு ஆதாரமாக ''பரந்த விண்வெளியின் பாதாளத்தில் சில உயர்ந்த விதிகளுக்கு அடங்கிய கோள்கள் வீறு நடை போடுகின்றன என்றார். ஒரு கடிகாரம் அதைச் செய்பவரை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அதே போன்று இயற்கையின் நிலையான விதிகளும், இந்த உலகின் இயக்கமும் அதை இயக்கும் ஒருவரை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தக் கருத்தை மறுதலித்து சில சிந்தனையாளர்கள் இந்த உலகு இயங்குவது ஒரு தற்செயலான நிகழ்ச்சியே என்றனர். இதை வால்டேர் மறுதலித்து அறத்தின் அடிப்படையிலே அதை விளக்கினார்.

வால்டேர் உறுதியாக சொல்கிறார், ''கடவுள் நல்ல செய்கைகளுக்குப் பரிசாக நல்லதையும் கெட்ட செய்கைகளுக்கு தண்டனையும் அளிக்கிறார் என்ற நம்பிக்கையே மனித குலத்திற்கு உகந்தது'' என்ற இந்தக் கொள்கையானது மிகச் சக்திவாய்ந்த மனிதர்களை நேர்வழிபடுத்த, நல்வழி படுத்த உதவும். ''பதினைந்தாம் நூற்றாண்டு இத்தாலியானது கடவுள் இல்லை எனக் கூறுவோர் பலரால் நிரம்பியதாகக் காட்சியளித்தது, அதன் கதியைப் பார்க்கவும்'' என்றார்.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு உணவு அளிப்பது போன்று விஷமிடுதலும், நண்பனைக் கட்டியணைப்பது போன்று அவன் இதயத்தில் குத்துவாளைச் செருகுவதும் இன்றைய உலகில் நாம் அன்றாடம் காணும் நிகழ்வுகளாயின. இதற்குக் காரணம் கடவுள் இல்லையென்றதால் அறம் அழிந்ததேயாகும். கடவுள் இல்லையென்பவன் அரக்கன். ''ஒழுக்கப் பண்பு கடவுளை

மறுதலிப்பவர்களுக்கும் மதவெறியர்களுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். கடவுளை நம்பி நல்லவனாக நட.

ஆதியும் அந்தமும் ஆக விளங்கும் எல்லாமுமான கடவுளை இளவரசன் ஆயினும் அல்லது சாதாரண மனிதனாயினும் ஆழ் மனதில் கொண்டிடல் வேண்டும்''. என்றார் வால்டேர்.

கடவுளின் முன்பாக மனிதனின் நிலை என்ன? வால்டேர் தனிப்பட்ட மனிதனின் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டிருந்தாரா? தன் அறிவியல் நண்பர்களையொத்து அவர் இந்த உலகமானது நிலைநிறுத்தப்பட்ட கோட்பாடுகளில் இயங்குகிறது என்பதை ஒத்துக் கொள்கிறார். இந்த கோட்பாடுகள் மாற்ற முடியாத, அழிவில்லாத, மறுக்க முடியாத விதிகள் எனவே தான் பூமியின் மையப் பகுதி நோக்கி எல்லா பொருள்களும் ஈர்க்கப் படுகின்றன. பேரிக்காய் என்றுமே அன்னாசிப் பழமாகாது. ஒரு நாயின் இயல்பூக்கம் ஒரு நெருப்புக் கோழியின் இயல்பூக்கம் ஆகாது. தகுதியானவர் விருப்பத்திற்கு ஏற்ப தான் சமைத்த கோட்பாடுகளை கடவுளே தன் அற்புதங்கள் மூலம் மாற்றியமைக்க முடியுமா? முடியாது. கடவுளே தன்னுடைய சுயவிருப்பத்திற்கும் சுய ஞானத்திற்கும் உள் இயல்புக்கும் அடங்கியவர். ஏனென்றால் அவர் இயற்கையின் விதிமுறைமைகளை மாற்ற இயலாதவர். நம்மைப் போன்று உடனுக்குடன் மாறும் மன இயல்பு இல்லாதவர். காற்றுக் காலக்காட்டி போன்று கடவுள் தன்னை அமைத்துக் கொள்ளாதவர்.

''கடவுள் இந்த உலகில் நிலைநிறுத்தப்பட்ட கோட்பாடுகளை மாற்ற இயலாதவர் என்றால் எதற்காக அவரை நோக்கி நாம் பிரார்த்தனை செய்யவேண்டும். அவர் நம்மைப் பிரார்த்தனை செய்யச் சொல்லவில்லை. அவருக்கு செலுத்த வேண்டிய கடமையினை நாம் செய்வோம். நாம் நேர்மையுடன் இருப்போம். அதுவே நாம் கடவுளிடம் பிரார்த்தனை செய்வதற்கு ஒத்ததாகும்'' என வால்டேர் சொல்கிறார்.

வால்டேர் ஆன்மா என ஒன்று உண்மையில் இருக்கிறதா? அப்படி இருப்பின் அது அழிவில்லாததா? என்ற கேள்விகளுக்கு கீழ்க்கண்டவாறு பதிலிறுக்கிறார். திடப்பொருளிலிருந்து வித்தியாசமான ஓர் சக்தி இருக்கிறது அதுவே ஆன்மாவாகும்''. அழிவின்மை என்பதில் வால்டேர் நம்பிக்கை கொண்டவரில்லை. ''ஆன்மா பற்றியும் நாம் ஒன்றும் அறிந்திருக்கவில்லை. கடவுள் நல்லதைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்தினைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவரின் படைப்புகளின் தாத்பர்யத்தை ஊடுருவிப் பார்க்கும் உரிமையினைத் தரவில்லை''

என்றார். மொத்தத்தில் மனோதத்துவ உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட படைப்பு ரகசியம் ஆவது மனிதன் தன் ஒழுக்கப் பண்பிற்கு கீழ்படிதல் வேண்டும் என்றார். கேன்டீத்தில் மேலே கூறப்பட்ட கருத்துக்களை கூறியுள்ளார். பிரபஞ்சத்தில் தீயதே நடக்கிறது எனும் எண்ணத்தில் கேன்டீத் எழுதப்பட்டதோ என்று தோன்றுகிறது. நாம் செய்யாத தவறுகளுக்கு தண்டனை அடைகிறோம். தவறு செய்திருந்தும் மன்னிக்கப்படுகிறோம். ரோமன் கத்தோலிக்க ஆலய அதிகாரங்களால் மனிதர்கள் பெருமளவில் தண்டிக்கப்பட்டனர். பெண்கள் பெருமளவில் மேலே கண்ட அமைப்பினால் பாதிக்கப்பட்டனர். இவைகள் உலகமே ஒரு பைத்தியக்காரனின் மனத்தில் எழும் கனவுகளைப் போன்று காட்சியளிக்கின்றது. இவைகள் ஏன் என்ற கேள்விகளை எழுப்பிப் புரிந்துகொள்ளுதலைவிட நாம் நம் தோட்டத்தைப் பேணி வளர்க்கலாம்'' இக்காட்சி வாக்கியத்துடன் முடியும் கேன்டீத்தின் செய்தியினை நாம் பொதுவான கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். நம் தோட்டத்தை நாம் கவனிக்கலாம் என்றால் நாம் தூய்மையான நகரங்களாக கட்டுவோம். மனித இனத்திற்கு தேவையான பொருள்கள் உண்டாக்கும் உற்பத்தித் திறனை அதிகரிப்போம் உழவு செய்வோம்''. இப்படியாக நாம் வால்டேர் ஃபெர்னியில் வாழ்ந்தது போல் வாழ்வோம். வாழ்க்கை நல்லதுமில்லை. கெட்டதுமில்லை. அது எப்படி இருக்கின்தோ அப்படித்தான் இருக்கிறது. அப்படியே அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை மேம்படுத்த முடிந்தால், முயற்சிப்போம். எப்படி? வேலையின் மூலமாக, மிதமான தன்மையின் மூலமாக, பொறுமையின் மூலமாக நாம் அதை அடைதல் வேண்டும். மனோதத்துவ அறிஞர்களின் விவாதங்கள் பயனில்லாதவை. எனவே நாம் நம் தோட்டங்களை செப்பனிட வேண்டும்''. இதுவே வால்டேரின் அறைகூவல்.

வால்டேரின் வரலாற்றுப் பார்வைகள்

வால்டேர் தன் காலத்தில் 14ம் லூயி மற்றும் 12ம் சார்லஸ் போன்ற பேரரசர்களின் வாழ்க்கை வரலாற்றினை எழுதியதோடு மட்டுமின்றி உலக வரலாற்றினை எழுதிய முதல் மனிதராவார். அவரின் உலக வரலாறானது ஆசியா, இந்தியா, ஜப்பான், சைனா போன்ற நாடுகளின் வரலாறுகளை உள்ளடக்கியது. இயற்கைக்கு அப்பாற்பட்ட வரலாற்றின் மீது நம்பிக்கை இல்லாதவர். வரலாறு என்பது கிறித்துவ மதத்திற்கும் மன்னர் ஆட்சிக்கும் இடையே நடைபெற்ற நீண்ட போராட்டமாகும் என்று முடியாட்சியின் முடிவே துன்புறுத்தலின் திட்டமாகும் என்று நம்பினார். ஆனால் இந்த

மன்னர் ஆட்சி மதக்குருமார்களின் ஆட்சியைவிடக் கொடுமையாக இருக்க முடியும் என்பதையும் புரிந்து கொண்டார்.

சில வழக்கங்களாலும் நம்பிக்கைகளாலும், குடும்ப வாழ்க்கை, சொத்துரிமை, பாதுகாப்பு, எதேச்சதிகாரத்திற்கு சட்டம் விதித்து தடைகளாலும், அழியாமல் பாதுகாக்கப்பட்டது என்பதைக் கண்டறிந்தார். விக்கட்சி ஆண்ட இங்கிலாந்தை தன் இளமைக் காலத்திலும் அதற்குப் பின்பும் உணர்வுப் பூர்வமாக வியந்து பார்த்தவர் வால்டேர். இங்கிலாந்தில் எண்ண உரிமை மற்றும் பேச்சுரிமை, சகிப்புத் தன்மை, மத ஆதிக்கத்தை விஞ்சிய மக்களின் அதிகாரம், கீழ்நிலையிலுள்ள வகுப்பினர் உயர்நிலைக்கு வரக்கூடிய வாய்ப்பு, அரசியல் சட்டத்திற்குட்பட்ட மன்னர் ஆட்சி இவைகளெல்லாம் வால்டேரின் அரசியல் கோட்பாட்டை உருவாக்கின.

வால்டேர் போர் என்றாலே கடும் வெறுப்பு கொண்டிருந்தார். இந்த வெறுப்பை நூறு முறைக்கு மேல் எழுதியுள்ளார். அவர் குரூரத்தை மற்றும் சித்திரவதையினை எதிர்த்துக் குரல் கொடுத்தார். சுதந்திர அரசு பற்றிக் கூறும் பொழுது மதக்குருமார்கள் இயற்றும் எந்த சட்டமும் அரசின் அனுமதி இல்லாமல் செல்லுபடி ஆகாது என்று கூறினார். ஒரே எடைக்கும் ஒரே அளவீடுக்கும், ஒரே வரிக்கும் ஆதரவாக இருந்தார் மனிதனின் பேரார்வங்களுக்கும் எண்ணத்திற்கும் ஒழுக்கக்கேடுகளுக்கும் குடியரசு சில தடைகள் விதிக்கலாம். ஆனால் அவர் உரிமைக்கு ஆதரவாகப் பேசும் பொழுது முன் ஜாக்கிரதையுடன் மிகவும் அறிவாற்றலுடன், நகைச்சுவையுடனும், பாராட்டுக்குரிய செம்மாந்த அறிவுடனும் கூடிய அரசியல்வாதியாக திகழ்ந்த காலத்தில் அவர் ஒரு குறிப்பிட்ட மக்கள் ஒடுக்கப்படுவதனை ஆழமாக வெறுத்தார்.

வால்டேரின் ஆதரவாளர்களில் ஒருவரான சோய்ஸில் டச்சஸ் எனும் பெண்மணி பின்வருமாறு எழுதுகிறார். ''பல தவறுகளினால் வால்டேரை ஒருவர் கடிந்து கொண்டாலும் என்னை பொறுத்தவரை அவரின் எழுத்துக்களை நான் படித்து, மீண்டும், மீண்டும் படித்து சுவைப்பதற்கு காரணம் அவரது இலக்கியச் சுவை மற்றும் உலகளாவிய பொதுநோக்கு என்பேன்'' இந்த வகையில் அவர் வால்டேர் காலத்தில் வாழ்ந்தவர்களின் உணர்வுகளை முழுமையாக பிரதிபலிக்கிறார் என்று கூறலாம்.

எல்லாம் அறிந்த மனிதராக அவர் திறமையுடன் அறிவியல், பொருளாதாரம், அரசியல், வரலாறு மற்றும் சமயம் போன்றவற்றைப் பற்றிக் கூறியுள்ளார்.

இலக்கியத்தின் மீது வால்டேரின் தாக்கம் அழுத்தமானது என்று கூறலாம். அவரின் புதினங்களால் ஏற்பட்ட தாக்கம் மற்றவைகளை விட அதிகமானது. கேன்டீத்தின் மனநிலை ரேணன், அனடோல், ஃபிரான்ஸ் ஜாக்ஸ் பெயின்வில் போன்றவர்களை வெகுவாக மனவெழுச்சி அடையச் செய்தது. வால்டேரின் அரிய நடை, ஆழமான அறிவாற்றல், புத்திசாலித்தனம், புரியும் பாங்கு போன்றவைகள் ஃபிரஞ்சு எழுத்தாளர் அனைவரையும் மிகவும் கவர்ந்தது. வெளிநாடுகளிலும், ஆங்கில கவிஞன் பைரன் போன்றோர் வால்டேரின் உட்பொருள் கொண்ட சொற்களை கையாளும் சூட்சுமத்திற்கு கடன் பட்டவர்கள். பெர்னார்ட் ஷாவின் மிகப் பெரிய ஆசை வால்டேர் வாழ்ந்ததைப் போன்று வாழ்தலே ஆகும். நம் காலத்தில் வாழ்ந்த லிட்டன் ஸ்டிராச்சி வால்டேரின் நகைச்சுவை நிரம்பிய கிண்டல் தொனிக்கும் எழுத்துநடையை பின்பற்றியவரே.

சக்ரவர்த்தினி யூஜினி ''நான் அறியாததை எனக்கு அறியவைத்துப் புரியாததைப் புரியவைத்த வால்டேரை நான் என்றும் மன்னிக்க, மாட்டேன்'' என்றார்.

கேன்டீத்திலிருந்து நாம் பெறும் வால்டேரின் எண்ண சாராம்சம்

1. கேன்டீத்

குஸ்டாவ் ஃப்ளோபெர்ட் கேன்டீத்தை வால்டேர் எழுதிய அனைத்து நூல்களிலும் காணப்படக்கூடிய கருத்துக்களின் தொகுப்பு என்கிறார். கேன்டீத்தின் அற்புதமான சக்தி என்னவென்றால் இது வால்டேரின் பல்வேறுபட்ட உணர்வுகளையும் எண்ணங்களையும் கோடிட்டு காட்டுகிறது. அதாவது போர், பஞ்சம், கொள்ளை நோய், பூமியதிர்ச்சி, கடல் கொள்ளையர்கள், ஆக்கிரமிப்பாளர்கள், அடிமைகள், ஒடுக்குபவர்கள், மனிதனை சாப்பிடுபவர்கள், துரோகிகள், திருடர்கள், கொலைக்காரர்கள், எல்லாவகையான வெறியர்கள் போன்றவர் உலகில் காணப்படும் அச்சுறுத்தும் விஷயங்களில் அவரின் கவனம் இருந்தது. மேலும் தெய்வாலயம், விஞ்ஞான ஆய்வுகள், கலைகள், பாரிசின் காட்சிகள், தத்துவம், வரலாறு, வெளிநாட்டுப் பயணம் போன்றவைகளும் இதன் உள்ளடக்கமாகும். நம்மைப் படிக்கத் தூண்டும் இந்த புதினம் பல்வேறுபட்ட தகவல்களின் அடிப்படையில் அமைந்திருந்தாலும் சுயநலம், வெறுப்பு, பயங்கரம், அர்த்தமற்ற கொண்டாட்டங்கள் போன்றவைகளைக் கடுமையாக தாக்கி நம்மை அறிய வைக்கிறது.

இந்த படைப்பு நம்மை மகிழ்விக்காவிட்டாலும், நல்லதாக நினைக்க முடியாவிட்டாலும் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும். நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. கேன்டீத் எனும் கதாநாயகன் உலக முழுக்கச் சுற்றி இந்த பாடத்தை நமக்கு உணர்த்துகிறான்.

கத்தோலிக்கத் தேவாலய குருமார்கள் தங்களை எதிர்த்தவர்களை எதிர்ப்பாளர்களை 17,18ஆம் நூற்றாண்டுகளில் கடுமையாகத் தண்டித்தனர். பெண் கைதிகள் முடிவிலா படுகொலைகளுக்கு ஆளாக காரணமானார்கள். வால்டேர் ரோமிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்தின் சீர்கேடுகளைக் கடுமையாகச் சாடினார்.

ஒவ்வொருவரும் தங்களால் முடிந்ததைச் செய்ய முடியும். அது ஒவ்வொருவரின் திறமையைப் பொருத்தது. செய்யும் தொழில் தான் பிரச்சனைகளுக்கு விடையாகும். தொடர்ச்சியாக, அறிவுப்பூர்வமாக, தொழில் செய்யப்பட வேண்டும்.

சோம்பேறியாக இருக்க எந்தவொரு மனிதனும் பிறக்கவில்லை. சண்டையிட்டுக் கொள்ளாமல் நாம் வேலை செய்ய வேண்டும். அதுவே வாழ்க்கையைப் பயனுடையதாக மாற்றும்.

புதினமான கேன்டீத்தில் வரும் நிகழ்வுகள் பல உண்மைச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டவை. அது வரலாறாக இருந்தாலும் சரி அல்லது தனிப்பட்ட அனுபவமாக இருந்தாலும் சரி. அவர் ஸ்விட்சர்லாந்திலே அமைதியாக எழுதிக் கொண்டிருந்த காலத்தில் தம்மைச் சுற்றி இருந்த கொடுங்கோலர்களையும் தீயது செய்பவர்களையும் கடுமையாக எதிர்த்தார். மேலும் அங்கு பல சொத்துக்களை வாங்கினார். ஃபெர்னி எனும் பெரிய தோட்டத்தையும் விலைக்கு வாங்கினார். இந்த தோட்டத்தைத் தான் அவரின் எஞ்சிய வாழ்க்கைக் காலத்தில் பயிரிட்டு வளர்த்தார்.

இங்கிலாந்து

இந்நூலிலே ஆங்கிலேயர்கள் எவ்வாறு சுதந்திரத்தினை அனுபவிக்கிறார்கள் என்றும் அதுவே ஃபிரான்சிலே நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதும் அவரது ஆர்வம். ஃபிரான்சிலே எவ்வாறு அமைப்பு முறைகள் சீர்படுத்தப்பட வேண்டும் என்றும் உரிமை எவ்வாறு பெறப்பட வேண்டும் என்பதையும் கூறியுள்ளது. கீழ்க் கண்ட வார்த்தைகள் அவரின் புத்தகத்தில் எதிரொலிக்கின்றன. ''ஒரு ஆங்கிலேயனுக்கு உரிமை இயற்கையாக அமைந்துள்ளது. அதனால் அவன் விருப்பப்படி சொர்க்கத்திற்குச் செல்லமுடியும்''.

இங்கிலாந்தின் சொத்துக்கள் அந்த நாட்டின் வலிவின் ஒரு முக்கியமான பாகமாகும். ∴பிரான்சானது ஆளும் பிரபுத்துவத்தை வியாபாரத்திலே ஈடுபடுத்தாமல் நிறைய இழப்புகளை ஏற்க வேண்டியிருந்தது.

''ஆங்கிலேயர்களே முடியாட்சியின் மீது முறையான கட்டுப்பாட்டின் மூலம் அதிக உரிமைகளை அதிக அளவில் அனுபவிக்கிறார்கள்''.

∴பிரான்ஸிலே ஒவ்வொரு வகுப்பாருக்கும் அதாவது பிரபுத்துவம், மதம், பூர்ஷ்வா, விவசாயிகள் போன்றோருக்குத் தனிச்சட்டம், சிறப்புரிமைகள், தனித்தனியே வரி அமல்படுத்துவதால் நாடு சுபிட்சமடையவில்லை. ஒரே நீதி இங்கிலாந்தில் இருப்பது போல் கொண்டு வருதல் வேண்டும்.

வால்டேர் ஆங்கிலேய தத்துவ அறிஞரான லாக்கின் நடைமுறைக்கேற்ற இலக்கிய படைப்புகளை வெகுவாய் பாராட்டுகிறார். ஏனெனில் எந்த மனோதத்துவ உண்மைகளையும் யூகித்துக் கொண்டு மனித விவகாரங்கள் ஆய்வு செய்யவில்லை. நம்முடைய நலிந்த மனித ஆற்றல்களை நம்மை சுற்றியுள்ள உலகத்திற்காக பயன்படுத்துவதில் முனைப்பாக இருக்கவேண்டும் என்பதிலும் நம்முடைய உணர்வுகளின் மூலம் எவை எவை உளதாயிருக்கிறது என்பதையும் பரிசோதிக்க வேண்டும் என்பதிலும் வால்டேர் லாக்குடன் ஒத்துப் போகிறார்.

வால்டேர் இங்கிலாந்தில் இருந்த பொழுது இறந்து போன நியூட்டனின் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டு அவரது உடல் எவ்வளவு மரியாதையுடன் புதைக்கப்பட்டது என்பதைக் கண்டார். இதைச் சுட்டிக்காட்டி ∴பிரென்ச்சு மக்கள் எவ்வாறு டைகார்ட் போன்ற தம் சிறந்த சிந்தனையாளர்களுக்குத் தக்கமதிப்பளிக்காமல் ஒதுக்கினர் என்பதை உணர்த்தினார். மேலும் நடிகர், நடிகைகள் இறந்தவுடன் ∴பிரான்ஸிலே அவர்களிடம் எவ்வாறு ∴பிரான்ஸ் நடந்து கொள்கிறது என்பது குறித்தும் வேதனைப்பட்டார்.

வால்டேரின் தத்துவ அகராதி

இது இப்பொழுது நாம் புரிந்துவைத்துள்ள அகராதி போன்றதன்று. மற்றும் இது தத்துவ சம்பந்தப்பட்ட அகராதியும் அல்ல. ஒரு சிறப்பான காலத்தின் அம்சமான இந்த அகராதி வால்டேரின் பலதரப்பட்ட கட்டுரைகளை உள்ளடக்கியதாகும். வால்டேர் இந்த அகராதியில் உரிமை சம்பந்தப்பட்ட கட்டுரைகளை திறந்த மனத்துடனும் தொடர்ச்சியாகவும், எழுச்சியாகவும்

எழுதியுள்ளார். உண்மையையும், பகுத்தறிவையும் நல்லதையும் தேடும் முயற்சியாகவும் இந்தப் படைப்பு முழுமையும் உள்ளது. அவரை வழி நடத்தும் குறிக்கோள் உண்மையும் நல்லதும் ஆனதே நீதியாகும் என்பதுதான். 'இந்த அகராதி ஒரு சிறிய கையேட்டு அகராதியே (Portable Encyclopaedia)'. பலதுறைகளில் மனிதர்களின் ஆழ்சிந்தனைகளையும், பொதுக் கொள்கைகயையும் இந்த அகராதி செம்மைப்படுத்தியது என்று கூறலாம்.

வால்டேரும் ரூஸோவும்

ரூஸோ வால்டேரிடம் அடக்கமுடியாத தம் வெறுப்பினை காட்டியவர். தம் துண்டு வெளியீடு ஒன்றில் வால்டேர் ரூஸோவைத் தாக்கி எழுதியிருந்தார். இதனால் சினங்கொண்ட ரூஸோ வால்டேர் ஒரு மோசடிக்காரர் என்று குற்றம் சாட்டினார். முதலில் இவ்விருவருக்கும் இடையே சுமாரான உறவுகள் நிலவின. ரூஸோ இயற்கையான உணர்வுப்பூர்வமான நடத்தை மற்றும் கல்வி ஆகியவைபற்றி பாராட்டி வந்தார். வால்டேர் இது ஞானமடைந்த மனிதனின் பகுத்தறிவின் அணுகு முறையிலிருந்து விலகுவதாகக் கருதினார். ரூஸோவின் புத்தகம் ஆகிய எமிலியும், நாடக அரங்கம் குறித்து தாம் வெளியிட்ட மறுப்பும் வால்டேரின் ஏளனத்தைக் கிளறியது. அவர் வால்டேரை கிறித்துவ மதத்திற்கு எதிரானவர் என்றும் யேசு நாதரைக் கடவுளாக காட்ட மத போதகர்கள் சதி செய்கிறார்கள் என்று கூறுபவர் என்றும் வெகுவாக கண்டித்தார். இப்படி இக்கருத்துகளை பிரசுரிப்பதன் மூலம் ரூஸோ வால்டேருக்கு மிக பயங்கர ஆபத்துகளை ஏற்படுத்த இருந்தார். கோபப்பட்ட வால்டேர் ரூஸோவைத் தாக்கி எழுதினார். ரூஸோ போன்ற பல எழுத்தாளர்களை உயர்வாக நினைத்தவர்தான் வால்டேர். ஆனால் ரூஸோவின் போக்கு சரியில்லை என்பதினால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரை வருத்தத்துடன் தாக்கினார். ரூஸோ ஒரு பைத்தியக்காரர் மற்றும் ஒரு நெறிகெட்டவர் என்று தாம் சொல்ல வேண்டியதாக உள்ளதே என்று வால்டேர் தன் நண்பர் ஒருவரிடம் வருத்தத்துடன் கூறினார். தான் என்ன தவறு செய்ததற்கு வால்டேர் தன்னைக் கடுமையாக சாடுகிறார் என்பதை ரூஸோ துயரத்துடன் வினாவினார். ஆனால் வால்டேர் ரூஸோவின் நடத்தை இலக்கிய ரீதியான சண்டையிலிருந்து விலகியது ஒரு மோசமான நன்றி கெட்டதனம் மற்றும் போக்கிரித்தனம் என்று நினைத்தார். தியோடர் பெஸ்டர்மேன் என்னும் எழுத்தாளர் ''வால்டேர் அளவிற்கு கற்றறிந்தவர். அவர் போன்று ஒற்றுமைக்கு பாடுபட்டவர் வேறு எவரும் இலர்'' என்று கூறுகிறார். கடைசியாக வால்டேர் ரூஸோவைப் பற்றிக் கூறும்பொழுது இலக்கியத்திற்கு

பயனுடையவராக விளங்கி இருக்கக்கூடிய ரூஸோ, தன் கேலிக் குரிய அகந்தையினாலும் மோசமான நடத்தையினாலும் இலக்கியத் திற்கே எதிரி ஆகிவிட்டார் என்றார்.

வால்டேரும் ஃபிரடெரிக்கும்

முதலில் இருவரும் நல்ல நண்பர்களாகப் பழகத் தொடங்கினர். அதன்பிறகு ஃபிரெடரிக், வால்டேரின் ஒரு துண்டு வெளியீட்டினை பெர்லினிலே எரித்ததினால் அவர்களின் நட்பு முறிந்தது. ஃபிரடெரிக் ஒரு அரண்மனைவாசி வால்டேர் பற்றிக் கேட்ட பொழுது ஃபிரடெரிக் சொன்னான். ''ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து பிழிந்து அதன் சாற்றினை குடித்தபிறகு தோலைத் தூக்கியெறிவதை ஒத்தது தன் நட்பு'' என விடையிறுத்தான். இதற்குப் பதில் கொடுக்கும் வகையில் வால்டேர் சொன்னதாவது. ஃபிரெஞ்சு மொழியில் தவறான நடையிலே பாடல்களை ஃபிரடெரிக் எழுதினார். அவைகளைத் திருத்தித்தருவதே என் முழு வேலையாகி விட்டது. அவர் இப்படி தான் எழுதும் மோசமான கவிதைகளை தனக்கு அனுப்புவதை எப்பொழுதுதான் நிறுத்தப்போகிறாரோ என்று தெரியவில்லை. ஃபிரெடரிக்கால் துன்புற்று வால்டேர் ஜெர்மெனியிலிருந்து தப்பிச்சென்றார்.

வால்டேரின் முக்கிய பொதுப் படைப்புகள் - காவியப்பாடல், துன்பியல் நாடகம் மற்றும் வரலாறு

ஐரோப்பியக் கலாச்சாரத்தின் தலைவரைப் போன்று வால்டேர் ஒரு உறுதியுடன் தமது பொது நூல்களினை எழுதினார். பொதுவாகச் சொல்லப்போனால் அறிவார்ந்த மறுமலர்ச்சிக் காலத்தின் முக்கிய எழுத்தாளர் இவரேயாவார். அவர் இந்த அறிவார்ந்த காலம் சென்ற காலத்தைவிட பெருமையானது என்று உறுதியாக கருதினார். மனிதாபிமானமிக்க ஓர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என நம்பினார். வால்டேர் தம் இலக்கியத்தை ஒரு தேடும் பணிக்கான ஒளியாகப் பயன்படுத்தி உயர்ந்தவைகளை வெளிப்படுத்தி, உண்மைகளைக் கூறி பொய்யானதைத் தோலுரித்துக் காட்டுவதோடு லஞ்சத்தை ஒழிக்கவும் முயற்சித்தார். அவர் அவரின் காலத்தின் மேன்மையான ஒரு படைப்பு என்றே கூற வேண்டும். அக்காலத்தின் சிந்தனைகளின் சாரமாகவும், மனிதர்கள் வாழ்ந்ததை காட்டும் கண்ணாடியாகவும், அவரின் படைப்புகள் அமைந்தன.

வால்டேர் தம் வாழ்நாள் எல்லாம் காவியம், துன்பியல் நாடகம் எனும் இரண்டுடன் உரைநடையில் எழுதப்படும் வரலாறு

போன்றவைகள் தான் எழுத்தாளரின் முக்கிய கவனத்தைக் கவர்வதாகும் என்று சொன்னார்.

இருப்பினும் வால்டேரின் வரலாற்றுப் படைப்புகள்தான் அவரது மேதா விலாசத்தை வெளிப்படுத்தியது. அவரின் அப்படைப்புகளில் சிறந்தவைகளாகக் கருதப்படுவது ''உலக வரலாற்றுக் கட்டுரைகள்'' மற்றும் ''14ஆம் லூயியின் காலம்'' ஆகும். அவர் காலத்தில் நிகழ்ந்த கலவையான பல நிகழ்வுகளை அழுத்தமாகவும் மிக விரிவாகச் சொல்லும் பாங்கினை நோக்கும் போது நவீன வரலாற்றின் முன்னோடியாக அவரை கருதுவது மிகையாகாது.

வால்டேரின் காவியப் படைப்பான ஆன்ட்ரியாத் ஃபிரான்ஸ் நாட்டின் மாமன்னன் நான்காம் ஹென்றியின் கதையை சொல்கிறது. எப்படி அவன் ஃபிரான்ஸை 16வது நூற்றாண்டில் ஐக்கியப் படுத்தினார் என்பதைக் கூறுகிறது. வால்டேரை பொறுத்தவரை நான்காம் ஹென்றிதான் ஃபிரான்ஸ் ஒரு தேசமாக விளங்குவதற்கு அடிகோலியவன். இதன் தொடர்பாக வர்ஜிலின் நடையில் வால்டேர் பின்வருமாறு தம் கவிதையைத் தொடங்குகிறார்.

லீஸ்பனில் நடைபெற்ற பேரழிவு (1756) The Lisbon Disaster.

[எதுவாக இருப்பினும், அது சரி - என்ற உண்மையினை அறியும் முயற்சி]

''பரிதாபத்திற்குரிய மனிதன், பூமி - விதியை சபிக்கப்பட வேண்டும். பிளேக் முடிவில்லாத்துளை போன்று மற்றும் பல துன்பங்களும் பயங்கரம், துன்பத்தின் மீது துன்பம் போன்றவைகள் முடிவில்லாத அன்பு வயப்பட்டமனிதன் காணும் துயரங்கள் ஆகும். கதறி அழும் மனிதர்களைப் பார்த்து நான் வேதனைப்படும் நேரத்தில், தத்துவ ஞானிகள் மழை குறித்துப் பேசுகிறார்கள். கும்பலாக இருக்கும் மனிதர்கள் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யும் மனிதர்கள் ஒன்றன் மீது ஒன்றாக விழந்து கிடக்கும் சுவர்கள் பரிதாபமாக இறந்தவர்களுக்காகத் துயரப்படும் மக்கள், வீணாகிப்போன, கிழிந்துபோன, சிறு மூச்சுக்குத்தவித்த வீட்டின் மேல் தளம் அவர்களை அழுத்திக் கீழே புதைக்க சொல்வீர்களா ? கடவுள், எப்பொழுதும் இருக்கக்கூடிய கோட்பாடுகளென இவைகளை ஏன் வைத்திருக்கிறார். நீங்கள் இவைகளெல்லாம் அவர்கள் செய்த குற்றங்களாக நிகழ்ந்தன என்று சொல்வீர்களா?''.

வால்டேரின் கவிதைகளில் அவரின் அற்புதமான சொல்லாட்சியைக் கவனிக்கலாம். அவரின் கவிதைப்படைப்பு பல

ஆயிரக்கணக்கான வரிகளாக அமைந்துள்ளது. அதில் அரசியல், தத்துவம், வஞ்சகப்புகழ்ச்சி சம்பந்தப்பட்டவைகளை ஆழமாகவும் திறமையாகவும் கையாளுகிறார். அவரின் கசப்பு உணர்வுகள் சோக வெளிப்பாடுகள் அவரது கவிதைகளுக்கு உயிர்ப்பு ஊட்டுகிறது. 1755யிலே லிஸ்பனில் நிகழ்ந்த நிலநடுக்கம் மனித சமுதாயத்தை எப்படியெல்லாம் உணர்வற்ற துன்பங்கள் ஏற்படுத்தி பாதிக்கின்றது என்று எழுதியுள்ளார். அவரின் பாடலொன்றின் ஆரம்ப வரிகளில் கீழ்கண்டவாறு மனித சக்திக்கு மிஞ்சிய துன்ப நிகழ்வு பற்றி எழுதுகிறார். இந்த நிகழ்வு பற்றி தத்துவ ஞானிகளின் தொடர்பில்லாத போக்கை கொண்டிருப்பதை சுட்டிக்காட்டுகிறார்.

வரலாறு : ஒரு காலத்தின் வரிவடிவம்

வால்டேர் தம் ''வரலாறு பற்றிய கருத்துரைகள் [1742]'' என்னும் நூலிலே மாற்றம் மற்றும் வளர்ச்சி போன்றவை ஏற்படலாம் என்கிறார். உரிமை, சகிப்புத்தன்மை, அறிவு பூர்வ வரலாறு இயங்குவதை பார்க்கலாம். இந்த நவீன உலகை நன்றாக உருவாக்குவதிலும் தவறாக உருவாக்குவதிலும் பல சக்திகள் செயல்படுத்துவதை உணர்த்தினார்.

வால்டேர் தம் சொந்த கருத்தை பின்வருமாறு கூறுகிறார். ''இந்த நவீன காலத்தின் பயனைப் பெறவேண்டுமானால், ஒருவரின் வாழ்க்கையானது கண்மூடித்தனமான கடந்த கால உருவகக் கதைகளில் மனம் மூழ்கித்திளைக்கக்கூடாது. நான் இந்தக்கால இளைஞர்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால் கடந்த காலத்தை மேலோட்டமாகப் படிக்கக் கூடாது. நமக்கே அக்கறை ஏற்படும்போதுதான் வரலாற்றினைப் படிக்க வேண்டும். எனக்கு இது 15ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி போன்று தோற்றமளிக்கிறது. எல்லா நாடுகளின் தற்போதைய புகழ் அடங்கியிருக்கும் கலைகள் கிரிஸ் மற்றும் ரோம் ஆகிய இரண்டும் கண்டிராத வண்ணம் உயர்ந்து காணப்படுகின்றன. இதில் தான் நாம் படிக்க வேண்டிய பாடம் உள்ளது. இதிலே இனிவருவது பற்றிய யூகங்கள் கடவுளின் சார்பாக சொல்லப்படும் பொய்கள் அல்லது பொய்யான அற்புதங்கள், மற்றும் அறிவில்லாத உருவகக் கதைகள் எவையும் இல்லை. இதில் சொல்வதெல்லாம் உண்மையே. எல்லாமே நம்மோடு சம்பந்தப்பட்டவையே. வளர்ந்த மனிதன் தன் சிறுவயதில் செவிலியர் சொல்லிய கதைகளை இப்பொழுது முக்கியமான பொருள்களில் கவனம் செலுத்தும்போது தேடிச் செல்லக் கூடாது''.

அறிவு வளர்ச்சி : ஒரு மாபெரும் சாதனை

14ஆம் லூயியின் காலக்கட்டத்தில் துயரமான பல போர்கள், பயனில்லாத மற்றும் தோல்வியில் முடிந்த பல நிகழ்ச்சிகள் உள்ளன. வால்டேர் இதை ஒதுக்கிவிட்டு வெற்றிகரமான, கலாச்சார, விஞ்ஞான சாதனைகள் போன்றவைகளை எடுத்துக் காட்டுகிறார். இது வால்டேர் தன் காலத்தை ஞானம் பெற்ற காலமாகக் காட்ட உதவுகிறது.

கத்தோலிக்க குருமார்கள் கையாண்ட குரூரமான விசாரணைகள்

வெற்றிகள் இருந்த போதிலும், வெறுப்புணர்வினைத் தூண்டும் அக்கிரமங்களும் இருந்தன. கத்தோலிக்க மத ஆலயத்தின் கொடுமைகள் மற்றும் வேதனைகள் குறித்தும் வால்டேர் பேசுகிறார். அவர் காலத்தின் கத்தோலிக்க குருமார்கள் குறிப்பாக ஸ்பெயினில் இருந்த குருமார்கள் இரக்கமற்ற சித்திரவதை மற்றும் கொலைத் தண்டனை மூலமாகவும் வைதீகத்திற்கு மாறான கருத்துக் கொண்டவர்களை ஒழித்துக் கட்டியதை வால்டேர் பின்வருமாறு விவரிக்கிறார். வெள்ளை ஆடையில் இருக்கும் மதத்துறவி அல்லது சன்னியாசி போன்றவர்கள் அன்புடன் நடக்க சத்தியம் செய்தவர்கள் அவர்கள் மத எதிர்ப்பாளர்களை ஒரு அறையில் அடைத்துத் துன்புறுத்துவது எவ்விதம் நியாயமாகும். வெளிச்சந்தையிலே நிர்மாணிக்கப்பட்டு எல்லோரும் பார்க்கும் விதமாக மத எதிர்ப்பாளர்கள் துன்புறுத்தப்படுவது எவ்விதம் நியாயமாகும். அவர்கள் புனிதப் பாடல்கள் பாடுகிறார்கள். ஆனால் அதன்படி நடப்பதில்லை. அரசனோ அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறான் வரலாற்றுக் கதாநாயகனைப் பாடுகிறேன். படைதனை வழி நடத்தும் பொறுப்பேற்று, முடியாட்சியின் வாரிசாக விளங்கி ஃபிரான்ஸை ஆட்சி செய்யும் நீண்டகால உழைப்பின் பயனாக ஆட்சிப் பொறுப்பேற்றவன், பலசாலி மென்மையானவனும் ஆவான் ஆட்சியைக் கைப்பற்றவும், மன்னிக்கவும் தெரிந்தவன். கூட்டமைப்புக்கு வித்திட்டவன் கூட்டுறவு ஆணவமான ஐபிரியாவை வெற்றி கொண்டவன். வெற்றி கொண்டவனும் நாட்டின் தந்தையாயும் விளங்கும், அவன்''.

மதப்போர்கள் - மதவெறியாட்டம்

மனிதனின் குருட்டுத்தனமான காட்டுமிராண்டித்தனமே மத போர்களுக்கு காரணமாகும். மனோதத்துவ உண்மைகளை

நிரூபிக்க முடியாத நிலையில் வேண்டாதவர்களை அழிப்பது அக்கிரமமாகும். பகுத்தறிவுதான் அறிவார்ந்த காலத்தின் வெளிப்பாடு. அதை ஓரங்கட்டிவிட்டு மத வெறியர்கள் பேயாட்டம் போடுவது அநாகரிகமான தாகும் என்கிறார் வால்டேர்.

தத்துவ ஞானி வால்டேர்

